# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF COMMERCE (EXTERNAL)
## 2008 / 2009 - HELD IN AUGUST 2009

## COM 33 – ACCOUNTING THEORY AND STANDARDS

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.** **நேரம்: 03 மணித்தியாலங்கள்**

---

01. லோகல் நிறுவனத்தினதும் அதன் உப கம்பனி பொறீன் நிறுவனத்தினதும் 31 மார்ச் 2008 இல் உள்ளவாறான ஐந்தொகையும் அவ்வருடத்தில் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்றும் கீழே தரப்படுகின்றன. (பொறீன் நிறுவனத்தின் அறிக்கையிடும் நாணயம் யுரோவாகும். இது "€" எனும் குறியீட்டால் ஏற்றுக்கொள்ளப்படும்.)

**31 மாரச் 2008 இல் ஐந்தொகை**

| | லோகல் | | பொறீன் | |
|---|---|---|---|---|
| | **$.'000** | **$.'000** | **€.'000** | **€.'000** |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், இயந்திரமும் உபகரணமும் | | 20,000 | | 30,000 |
| முதலீடு (குறிப்பு 1 உம் 2 உம்) | | 5,500 | | ------ |
| | | 25,500 | | 30,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| இருப்பு | 10,000 | | 18,000 | |
| வியாபார பெறுகைகள் | 10,000 | 20,000 | 15,000 | 33,000 |
| | | **45,500** | | **63,000** |
| **மூலதனமும் ஒதுக்கமும்** | | | | |
| வழங்கப்பட்ட மூலதனம் (1$/1€ பங்ககள்) | | 9,000 | | 15,000 |
| பகிரப்படாத இலாபம் | | 12,500 | | 10,000 |
| | | 21,500 | | 25,000 |
| நீண்டகாலக் கடன்கள் | | 10,000 | | 20,000 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | |
| வியாபார செலுத்துகைகள் | 7,900 | | 10,400 | |
| வங்கி மேலதிகப்பற்று | 6,100 | 14,000 | 7,600 | 18,000 |
| | | **45,500** | | **63,000** |

**31 மார்ச் 2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று**

| | லோகல் | பொறீன் |
|---|---|---|
| | **$.'000** | **€.'000** |
| வருமானம் | 50,000 | 60,000 |
| விற்றசரக்கின் கிரயம் (குறிப்பு 2 ) | (25,000) | (30,000) |
| மொத்த இலாபம் | 25,000 | 30,000 |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | (15,000) | (16,000) |
| பொறீனிடமிருந்து பங்கிலாபம் | 1,500 | |
| நிதிக்கிரயம் | (1,000) | (2,000) |
| வரிக்குமுன்னர் இலாபம் | 10,500 | 12,000 |
| வருமான வரி செலவுகள் | (3,600) | (4,200) |
| வருடத்திற்கான இலாபம் | **6,900** | **7,800** |

குறிப்புக்கள்:

1. 31 மார்ச் 2004 இல் லோகல் 11.25 மில்லியன் பங்குகளை பொறீன் நிறவனத்திடமருந்து €. 16.5 மில்லியன் பெறுமதிக்கு கொள்வனவு செய்தது. இத்திகதியில் பொறீன் நிறவனத்தின் பகிரப்படாத இலாபம் €. 5 மில்லியன் ஆகும்.

2. லோகலினால் முதலீடு செய்யப்பட்ட திகதியில் இருந்து டொலரானது யுரோவுக்கு எதிராக தேய்வடைந்துள்ளது. அவசியமான திகதிகளில் செலாவணி மாற்றுவீதம் பின்வருமாறு.

| திகதி | செலாவணி மாற்றுவீதம் (1€s. க்கு $1) |
|---|---|
| 31 மார்ச் 2004 | 3.00 |
| 31 மார்ச் 2007 | 2.40 |
| 31 மார்ச் 2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான சராசரி | 2.35 |
| 31 மார்ச் 2008 | 2.20 |

3. லோகல் பொறீனிடமிருந்து பங்கிலாபம் பெற்றுக்கொண்டபோது செலாவணி மாற்றுவீதம் €.2.20 க்கு $1.

வேண்டப்படுவது:

i. பொறீன் நிறுவனத்தின் ஐந்தைாகையினை டொலருக்கு மாற்றம் செய்து, 31 மார்ச் 2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான திரட்டிய ஐந்தைாகையினைத் தயாரிக்குக. .
(14 புள்ளி)

ii. பொறீன் நிறுவனத்தின் வருமானக்கூற்றினை டொலருக்கு மாற்றம் செய்து, 31 மார்ச் 2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான திரட்டிய வருமானக்கூற்றினைத் தயாரிக்குக.
(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. நெலும் நிறுவனத்தின் இரண்டு தொடர்ச்சியான வருடங்களுக்கான ஐந்தொகைகள் கீழே தரப்படுகின்றன. 2007 / 2008 நிதியாண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்குக.

**நெலும் நிறுவனம்**

**31. 03. 2007 இலும் 2008 இலும் உள்ளபடியான ஐந்தொகைகள்**

| | 2007 | | 2008 | |
|---|---|---|---|---|
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| **நிலையான சொத்துக்கள்** | | | | |
| காணி கட்டிடம் கிரயத்தில் | | 50,000 | | 55,000 |
| இயந்திரமும் உபகரணமும் கிரயத்தில் | 65,000 | | 100,000 | |
| கழி: தேய்வு | 43,000 | 22,000 | 55,000 | 45,000 |
| | | 72,000 | | 100,000 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | |
| இருப்பும் குறைவேலையும் | 58,000 | | 66,000 | |
| கடன்பட்டோர் | 29,000 | | 42,000 | |
| காசு | 10,500 | 97,500 | 12,000 | 120,000 |
| **கழி: நடைமுறைப் பொறுப்பு** | | | | |
| கடன் கொடுத்தோர் | 25,000 | | 32,000 | |
| வரி | 11,000 | | 17,000 | |
| பிரேரித்த பங்கிலாபம் | 7,500 | 43,500 | 10,000 | 59,000 |
| | | **126,000** | | **161,000** |
| **நிதியீட்டப்பட்டது** | | | | |
| பங்கு முலதனம் | | 90,000 | | 90,000 |
| ஒதுக்கம் | | 25,000 | | 40,000 |
| கடன்கள் | | 11,000 | | 31,000 |
| | | **126,000** | | **161,000** |

(10 புள்ளிகள்)

அ. நிலையான சொத்து தேய்வு என்றால் என்ன?

ஆ. நிலையான சொத்துக்களை தேய்வு செய்வதால் ஏற்படும் நன்மைகளை வரிசைப்படுத்துக.

இ. 2008ம் ஆண்டு காலப்பகுதில் குட் ஏத் நிறுவனத்தினால் கீழ்வரும் இயந்திர வகைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| 01.01.2008 | டீ றோலர் | Rs. 1,200,000 |
| 30.06.2008 | டீ றையர் | Rs. 6,000,000 |

31.12.2007 இல் நிறுவனத்தில் காணப்பட்ட இயந்திரங்களின் குறைத்தெழுதப்பட்ட மீதி ரூபா. 32,000,000. ஆகும். ஏல்லா வகையான இயந்திரங்களும் முழுமையாகத் தேய்வு செய்யப்படுகின்றன. ரூபா. 400,000 ஐ ஆரம்ப கிரயமாகக் கொண்ட இயந்திரத்தின் பகுதி ஒன்று ரூபா. 200,000 பெறுமதிக்கு 31.12.2007 இல் விற்பனை செய்யப்பட்டது. தேய்வானது நேர் கோட்டு முறைப்படி 10% செய்யப்படுகின்றது.

**வேண்டப்படுவது:**

அ. அவசியமான நாட்குறிப்புப் பதிவுகள்

ஆ, இயந்திர விற்பனை தொடர்பான பேரேட்டுக் கணக்குகள்

இ. 31.12.2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கின் சுருக்கம்.

(20 புள்ளிகள்)

04. அ. விலைமட்டம் அதிகரிக்கும்போது வரலாற்றுக் கிரயரீதியான கிரய கணக்கியலில் காணப்படும் குறைபாடுகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ. “ஒரு வியாபார நிறுவனத்தன் நிதி நிலமையினையும் வினைத்திறனையும் விளங்கிக் கொள்வதற்கு ஒரு நிறுவனத்தின் நிதிக்கூற்றின் வைத்திருத்தல் இலாபத்தின் அடையாளப்படுத்தலும் சரியான கையாள்கையும் அவசியமாகும்”.

வியாபார இலாபத்தை அளவிடுவதற்கு வைத்திருத்தல் இலாபத்தின் கையாள்கையின் அவசியத்தை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

இ. கீழ்வருவன வரலாற்றுக் கிரய ரீதியாகவும் (HC), தேறத்தக்க பெறுமதி (RV) அடிப்படையிலும் 2008 நிதியாண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட தகவல்களாகும்.

| | **HC** | **RV** |
|---|---|---|
| | **2008** | **2008** |
| | ரூபா. | ரூபா. |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 160,000 | 150,000 |
| இருப்புக்கள் | 30,000 | 60,000 |
| தேறிய சொத்துக்கள் | **190,000** | **210,000** |
| புங்கு முதல் | 100,000 | 100,000 |
| பகிரப்படாத இலாபம் | 90,000 | 110,000 |
| பங்குதாரர் நிதி | **190,000** | **210,000** |

தேறத்தக்க பெறுமதி (RV) அடிப்படையிலான கணக்கியல் முறைமையினை ஆராய்ந்து இருப்பினுடைய வைத்திருத்தல் இலாபத்தினைக் கணிக்குக.

(05 புள்ளிகள்)

ஈ. A நிறுவனம் தனது வியாபாரத்தை 01 ஜனவரி 2008 இல் ஒரு அலகு ரூபா. 60 கிரயத்தில் 100 அலகு இருப்புடன் ஆரம்பித்தது. ஆகவே ஆரம்ப இருப்புப் பெறுமதி ரூபா. 6,000. இது அதே சமதொகையான ஈடுபடுத்திய மூலதனத்தினை வெளிப்படுத்துகின்றது. வருட இறுதித் திகதியில் இவ்விருப்பு ரூபா. 8,000 ற்கு விற்பனை செய்யப்படுகின்றது. அத்திகதியில் இதே 100 அலகினைக் கொள்வனவு செய்கதற்கு ஏற்படும் கிரயம் ரூபா. 7,200 ஆக உயர்வடைந்துள்ளது.

வருட ஆரம்பத்தைப்போல் வருட இறுதியிலும் வியாபாரம் காணக்கூடிய வகையில் 2008 இல் A பங்கீடு செய்யக்கூடிய ஆகக்கூடுதலான தொகை யாது?

(05 புள்ளிகள்)

(Total 20 புள்ளிகள்)

அ. கணக்கியல் நியமங்களின் அவசியம் யாவை?

ஆ. இலங்கை கணக்கியல் நியமம் – 3 (SLAS – 3) இல் குறிப்பிடப்பட்டபடி நிதிக்கூற்றுக்களின் உறுப்புக்கள் யாவை?

இ. நிதிக்கூற்றுக்களின் பல்வேறுபட்ட பாவனையாளர்கள் ஐந்துபேரைப்பற்றி விளக்குக.

ஈ. "தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு ("going concern)" "நிலைத்திருத்தல் எண்ணக்கரு (consistency of presentation)" என்பவற்றை விளக்குக.

உ. கணக்கியல் கட்டமைப்பில் கூறப்பட்டுள்ள தரரீதியான பண்புகள் யாவை?

ஊ. இலங்கைக் கணக்கியல் நியமம் 5 இன்படி "கிரயத்தின்" உறுப்புக்கள் மூன்றையும் விளக்குக.

எ. தேறிய, தேறத்தக்க பெறுமதியினை வரையறை செய்க.

ஏ. நிறுவனத்தினால் அண்மை வாரமொன்றில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு விபரம் கீழ்வருமாறு.

| நாள் | ஒரு அலகின் விலை (ரூபா.) | கொள்வனவு செய்யப்பட்ட அலகு |
|---|---|---|
| 1 | 1·45 | 55 |
| 2 | 1·60 | 80 |
| 3 | 1·75 | 120 |
| 4 | 1·80 | 75 |
| 5 | 1·90 | 130 |

அவ்வாரத்தில் ஆரம்ப இருப்புக்கள் எதுவுமில்லை. வாரகாலப்பகுதியில் 420 அலகுகள் உற்பத்திக்கு வழங்கப்பட்டன. கம்பனியானது ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் பின் அதன் இருப்பு விபரத்தினை புதுப்பித்துக்கொள்கிறது.

முதல் வந்து முதல் செல்லும் இருப்பு கணிப்பு முறையை பயன்படுத்தி இறுதி இருப்பின் பெறுமதியை கணிக்குக.

ஐ. கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி இலங்கை கணக்கியல் நியமம் 5 இன்படி மாற்றீட்டுக் கிரயத்தினைக் கணிக்குக.

| | ரூபா. |
|---|---|
| நேர் மூலப்பொருள் பயன்படுத்தியது | 15,000 |
| விற்பனைக் கிரயம் | 500 |
| நேரில் ஊழியம் | 700 |
| நிருவாகக் கிரயம் | 1,000 |
| தொழிற்சாலை உபகரணத் தேய்வு | 7,000 |
| நேர் ஊழியம் | 4,000 |
| நேரில் மூலப்பொருள் | 4,500 |

ஒ. இலங்கை கணக்கியல் நியமம் 5 இன் பிற்குறிப்புத் தேவைப்பாடுகள் யாவை?

(30 புள்ளிகள்)

***